# பா.ஜ.க. வீழட்டும் - விவசாயிகள் வாழட்டும்!



**21** வயது இளம் விவசாயி ஒருவர் டெல்லி எல்லையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவர் செய்த பாவம், அவர் விளைவிக்கும் பொருளுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை தரச்சொல்லி ஒன்றிய அரசைக் கேட்டது மட்டும்தான். பிரதமர் வேட்பாளராக மோடி பா.ஜ.க.வினால் முன்னிறுத்தப் பட்டபோது, அவர் அளித்த வாக்குறுதியில் முக்கியமான வாக்குறுதி விவசாயிகளின் விளைபொருட்களுக்கு இரண்டு மடங்கு விலை அளிக்கப்படும் என்பதே. இரண்டு மடங்கு விலை தராவிட்டாலும் கூட வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமி நாதனின் அறிக்கையில் உள்ளது போல் (C2 + 50) உற்பத்திச் செலவினத்தில் இருந்து 50 விழுக்காடு அதிகமான விலையை உத்தரவாதப்படுத்துவது என்பதையாவது அமல்படுத்துங்கள் என்பதே உழவர்களின் கோரிக்கையாக உள்ளது.

**எளிமையாகச் சொல்ல வேண்டும் எனில், பா.ஜ.க. சொன்னது 100 ரூபாய் ஒரு பொருளின் உற்பத்திக்கான செலவு எனில் விவசாயிகளுக்கு அப்பொருளுக்காக 200 ரூபாய் கொடுக்கப்படும் என்பது. தற்போது விவசாயிகள் அதைக் கூட கேட்கவில்லை. குறைந்தபட்ச ஆதாரவிலையை உறுதிப்படுத்துங்கள் என்றே கேட்கிறார்கள்.**

**ஆனால், சொல்லுக்கும் செயலுக்கும் எப்போதுமே சம்பந்தம் இல்லாத பா.ஜ.க.**



**ஆட்சிக்கு வந்ததும் விவசாயிகளுக்கு எதிரான சட்டங்களை வேகப்படுத்தியது.**

**கார்ப்பரேட்டுகளின் பல லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்ய மனமிருந்த மோடிக்கு விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்ய மனமின்றிப் போனது.**

வறட்சி, கொரோனா, விலைவாசி ஏற்றம் உள்ளிட்டவற்றால் பெரும் பாதிப்புகளைச் சந்தித்திருந்த விவசாயிகளுக்கு இடியாய் வந்திறங்கியது வேளாண் சட்டத்திருத்த மசோதாவும், அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டமும். வெங்காயம், உருளைக் கிழங்கு, பருப்பு, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய அத்தியாவசிய விளை பொருட்களை அத்தியாவசியப் பட்டியலில் இருந்து நீக்குவதே இந்த சட்டம். மேலும், இதன் மூலம் இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைத்துக் கொள்வதற்கான கட்டுப்பாடுகளையும் இச்சட்டம் விலக்கிக் கொண்டது.

மறுபுறம் வேளாண் சட்டங்களில் திருத்தம் கொண்டு வந்ததன் மூலம், பாரம்பரியமான மண்டி முறையினை ஒழித்து, பெரு நிறுவனங்கள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் வழிகளை உருவாக்கியது மோடி அரசு.

இதன் மூலம் நமக்கு தெளிவாகத் தெரிய வருவது, சிறு வணிகர்களை ஒழித்து, கார்ப்பரேட் முதலாளிகளிடம் விவசாயிகளை அடகு வைப்பது, அதன் மூலம் கார்ப்பரேட் முதலாளிகள் வைப்பதே விளை பொருட்களுக்கான விலை என்ற நிலையை உருவாக்குவது. இது மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கும். அது எனனவெனில். கார்ப்பரேட்டுகள் விவசாயி களிடம் அடிமாட்டு விலைக்கு விளை பொருட்களை வாங்கி அதை மாதக்கணக்கில் சேமிப்புக் கிடங்குகளில் தேக்கி வைத்து செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி, பின் அதீத விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் பேராபத்து இதில் உள்ளது.

**இதை அறிந்த விவசாயிகள் மிகப்பெரிய போராட்டங்களில் இறங்கினர். டெல்லி எல்லையில், கூப்பிடும் தூரத்தில் போராடிய விவசாயிகளை சென்று சந்தித்து பேசக்கூட மனமின்றி உலக நாடுகளுக்கெல்லாம் சுற்றுப் பயணம் சென்று கொண்டிருந்தார் பிரதமர் மோடி. ஆண்டுக்கணக்கில் நீடித்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் மாண்டு போயினர். உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற போராட்டத்தில் விவசாயிகளின் மீது ஒன்றிய உள்துறை இணைய மைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆசிஷ் மிஸ்ரா காரை ஏற்றி 4 விவசாயிகளை படுகொலைசெய்தார்என்றசெய்திவீடியோ ஆதாரத்துடன் ஒளிபரப்பானபோது நாடே அதிர்ந்துபோனது. நீண்ட போராட்டத்திற்கு பின்னரே குற்றவாளி கைது செய்யப்பட்டார்.**

ஒரு வழியாக, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் தேர்தலை மனதில் கொண்டு வேளாண் சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற்றது பா.ஜ.க. அரசு.

ஆயினும், உயிரிழந்த விவசாயி களுக்கு நீதி கேட்டும், உத்தரப்பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட 4 விவசாயிகளின் மரணத்திற்கு காரணமாக குற்றம் சாட்டப்பட்ட பா.ஜ.க. அமைச்சரின் மகனுக்கு விரைவில் சட்ட ரீதியாக தண்டனை கிடைக்க வழிவகை செய்யவும், விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உத்தரவாதப்படுத்தக் கோரியும் மீண்டும் விவசாயிகள் போராட்டத்தில் குதித்தனர்.



டெல்லி ஜந்தர் மந்தரை நோக்கி அணி திரண்ட விவசாயிகளை டெல்லி எல்லையிலேயே தடுத்து நிறுத்திய பா.ஜ.க. அரசு அவர்களின் மீது நடத்தும் தாக்குதல்கள் கொடூரமானவை.



**தமிழ் கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்

ஐக்கிய நாடுகள் சபையின் எச்சரிக்கையையும் மீறி ட்ரோன்கள் மூலமாக கண்ணீர் புகை குண்டுகளை சொந்த நாட்டு விவசாயிகளின் மீது வீசுகிறது மோடி அரசு.

ஈவு இரக்கமின்றி நடத்தப்படும் துப்பாக்கிச் சூட்டில் விவசாயிகள் பலர் படுகாயமுற்று கண் பார்வை இழந்துள்ளனர்.

தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு காதுகளை கிழிக்கும் விதமாக சத்தமாக இரைச்சலை உண்டாக்கும் இயந்திரங்கள் மூலம் விவசாயிகள் விரட்டப் படுகின்றனர்.

21 வயது இளைஞன். ஒரு முதியவர் என்று பலரின் உயிரையே பறித்துள்ளது மோடி அரசு.

கார்ப்பரேட்டுகளுக்குச் சாதகமான வேளாண் சட்டங்களை நடைமுறைப் படுத்த விடாமல் பெரும் போராட்டங்களின் மூலம் தடுத்து விட்டனர் விவசாயிகள் என்ற கோபத்தில் அவர்களை பகை நாட்டு பயங்கரவாதிகள் போல் நடத்துகிறது மோடி அரசு.

**அதனால்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மோடி அரசாங்கத்தை நோக்கி இதில் யார் தீவிரவாதிகள் உழவர்களா , அரசாங்கமா என்ற கேள்வியை எழுப்பினார். உழவர்களின் அறப்போராட்டத்திற்கு தி.மு.க. என்றும் துணை நிற்கும் எனறு உறுதியளித்தார்.**

**உழவர்களின் நலனில் தி.மு.க.வின் மீதான அக்கறை என்பது தி.மு.க. தொடங்கிய காலத்தில் இருந்தே இருப்பது. அதனால்தான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், உழவர் சந்தை, விவசாயக் கடன் தள்ளுபடி எனறு விவசாயி களின் நலன காக்கும் திட்டங்களை ஆட்சியில் இருக்கும் போதும், விவசாயி களுக்கான போராட்டங்களை எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் தி.மு.க. தொடர்ந்து செய்து வருகிறது.**

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்**

என்றார் வள்ளுவர். உலகிற்கு அச்சாணியாகத் திகழும் உழவர்களை கார்ப்பரேட்டுகளின் நலனுக்காக கொன்று குவிக்கும் இந்த பாசிச பா.ஜ.க.வும் மோடியும் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் எதிர்காலம் என்னவாகும் என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.

**மக்களிடம் இதை எடுத்துச் செல்வோம். பாசிச பா.ஜ.க.வை வீழ்த்துவோம். இந்தியாவைக் காப்போம். மாண்புமிகு முதலமைச்சர் காட்டிய வழியில் இந்தியா கூட்டணியை வலிமைப்படுத்துவோம்.**

## தேர்தல் களம்!

**அ**ன்பிற்கினிய தோழர்களே வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் மற்றுமொரு தேர்தல் அல்ல. அது பாசிசத்தை வீழ்த்தி ஜனநாயகத்தைக் காப்பதற்கான போர். இந்தப் போரில் நாம் பெறப்போகும் வெற்றிதான் இந்தியாவைக் காக்கும். அந்த வகையில் போரில் பங்கேற்க இருக்கும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் போர்ப்படையாம் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் அறிவாயுதம் ஏந்தி பாசிச பா.ஜ.க. வை வீழ்த்துவோம். நாம் உயர்த்திப் பிடிக்க இருக்கும் அறிவாயுதத்தின் ஒரு பகுதியாக **“தேர்தல் களம்”** தேர்தல் காலத்து சிறப்புத் தொடராக ‘முரசொலி’ யில் வர இருக்கிறது.

---

### தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி

## மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### ஜெ,ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமூக வலைத்தளக் குழு, ஆலோசனைக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் (29.02.2024 - வியாழக் கிழமை) அன்று காலை 9 மணி, இடம்: முத்தமிழ்ப் பேரவை அரங்கம், சத்யா ஸ்டுடியோ எதிரில், அடையாறு, சென்னை. கழகத் துணைச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணி இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச்செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.இக்கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர் மட்டும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை மக்களுக்கு பயனுள்ள வகையில் கொண்டாடுதல், 2.2024 நாடாளுமன்றத் தேர்தல் பணி.

**ஜெ.ஹெலன் டேவிட்சன்,**
மாநிலச் செயலாளர்
மகளிரணி

**நாமக்கல் ப.இராணி,**
மாநிலச் செயலாளர்
மகளிர் தொண்டரணி

---

## தேனி தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*தேனி, பிப். 27 -*

*தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம்.நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-*



*தேனி தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் இன்று (27.02.2024- செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி அளவில் சின்னமனூர் நகர், ஓடைப்பட்டி ரோட்டில் உள்ள கவிப்பிரியா மஹாலில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த. மனோகரன் தலைமையிலும், கம்பம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், தன செல்வம், ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கரூர் முரளி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.*

*இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள். இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

**பொருள்:**

*1. 23.02.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து.*

*2. நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து*

*3. கழக ஆக்கப்பணிகள்*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*




தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சவுதி தி.மு.க வின் அயலக அணி வெளிநாட்டு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் (NRTIA) Non Resident Tamil Indians Association மத்திய மண்டலம் மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் வெளிநாட்டுப்பிரிவு (இந்திய நல்வாழ்வு அமைப்பு Indian Welfare forum IWF) இணைந்து ரியாத் பகுதியில் தமிழ் பேசும் மக்களுக்காக, மாபெரும் இலவச மருத்துவ முகாம் டாக்டர் சந்தோஷ் தலைமையில் நடந்தது